ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1776/39 - 2012 සැප්තැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2012.09.21

*1776/39 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

*அறிவித்தல்*

**காரீயத் தொழில்**

*காரீயத் தொழிலுக்கான சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாகத் தனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் முடிபுகளை அவ்வட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் முடிபுகளை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 136) 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபையின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனைகள் ஒவ்வொன்றும் அவ்வாட்சேபனைக்கான காரணங்களைக் கூறும் கூற்றொன்றினை உடையதாய் எழுத்துவாயிலாக செய்யப்படுதல் வேண்டும்.*

*வீ. பி. பி. கே. வீரசிங்க,*
*தலைவர்,*
*காரீயத் தொழிலுக்கான சம்பளச் சபை.*

*தொழில் திணைக்களம்,*
*கொழும்பு 5,*
*2012, ஓகத்து 21.*

**அட்டவணை**

*காரீயத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1944 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதிய 9,224 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்கு காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1,660/35 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் அட்டவணையினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்துதல் வேண்டும்:-*

*"பகுதி II*

*நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டிருக்கும் வேலையாட்களுக்கு ஏற்புடைத்தான சாதாரண வேலை நாளொன்றிற்கான ஆகக்குறைந்த நாளாந்த சம்பள வீதங்கள் நிரல் II இல் காட்டப்பட்டவாறான வீதங்களாக அமைதல் வேண்டும்.*

### நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்

| *நிரல் I*<br>*வேலையாட்களின் வகுப்பு* | *நிரல் II*<br>*சாதாரண நாளொன்றிற்கான அடிப்படை விகிதங்கள்*<br>*ரூபா. சதம்* |
|---|---|
| **நிலத்தின் கீழ் தொழிலாற்றும் வேலையாட்கள் :** | |
| துளையிடுபவர்கள் (கை மற்றும் இயந்திரம்) | 882.00 |
| வெடிக்க வைப்பவர்கள் | 882.00 |
| சுரங்க செல் குழாய் செலுத்துநர் | 882.00 |
| மரம் வெட்டுபவர் | 882.00 |
| நிறுத்துநர்கள் (அகழ்பொறி) | 882.00 |
| தடை அகற்றுவோர் | 688.00 |
| கம்பிச்சுருளைக் கையாள்பவர் | 688.00 |
| முறைமாற்றும் தொழில் முதல்வர்கள் | 915.00 |
| கண்காணிப்பவர்கள் மற்றும் கண்காணிமார் | 974.00 |
| பாஸ்மார் | 1,176.00 |
| பாரம் ஏற்றுபவர்கள் | 974.00 |
| தேர்ச்சியற்ற தொழிலாளிகள் | 688.80 |
| பொருத்துபவர்கள் மற்றும் 'டொனகற்றகறயஸ்' | 974.40 |
| **நிலத்தின் கீழ் தொழிலாற்றும் மற்றும் தள வேலையாட்கள் :** | |
| பழுதுபார்ப்பவர், பொருத்துநர்கள், இலத்திரனியலாளர் | 1075.20 |
| உதவியாளர்கள் (பழுதுபார்ப்பவர், பொருத்துநர்கள், இலத்தினரியலாளர்) | 688.80 |
| திருகு உருளைப்பொறி நபர்கள் மற்றும் பாரந்தூக்கும் நபர் | 1,075.20 |
| பாரந்தூக்கும் இயந்திர நபர்கள் | 688.80 |
| பரிசோதகர்கள் | 974.40 |
| குழாய் நபர்கள் | 1,075.20 |
| பொறி நபர்கள் | 1,075.20 |
| **தள வேலையாட்கள் :** | |
| தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் | 537.60 |
| உலோக வேலை செய்பவர்கள் | 822.00 |
| துளை செப்பனிடுவோர் | 882.00 |
| பட்டறைப் பையன்கள் | 588.00 |
| வெப்பமேற்றும் நபர்கள் | 882.00 |
| மரவேலை செய்பவர்கள் | 1,075.00 |
| மேசன்மார்கள் | 1,075.00 |
| வண்டில் செலுத்துபவர் | 688.80 |
| காவற்காரர்கள் | 688.80 |
| கண்காணிப்பாளர்கள் | 974.40 |
| விறகு எடுத்துச் செல்பவர்கள் மற்றும் பிரிப்பவர்கள் | 722.40 |
| சமையற்காரர்கள் | 588.00 |
| 'பாக்கிகறயஸ்' அல்லது வங்கி நபர்கள் | 879.00 |
| **நிறைவான பொருளை ஆக்குவதனுடன் தொடர்புபட்ட கீழுள்ள வேலையில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள வேலையாட்கள்** | |
| (அ) பொதி செய்தல், தரம் பிரித்தல், சிராய்த்தல், நொருக்குதல், அரித்தெடுத்தல், மாற்றுதல், கழுவுதல், மினுக்குதல், வகுப்பிடல், காரீயத்தை அனுப்புதல், பைகளை ஆக்குதலும் தைத்தலும், நிரப்பிய பைகள் மற்றும் நிரப்பாத பைகள் | 588.00 |
| (ஆ) கண்காணிப்பாளர்கள் மற்றும் கண்காணிகள் | 882.00" |

10- 321/1

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

*அறிவித்தல்*

**இறப்பர் ஏற்றுமதித் தொழில்**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இதற்கான அவ்வட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு அவ்வட்டவணையில் குறித்துரைக்கப்படுகின்ற முறையில் சபையின் அத்தகைய முடிவுகளை சபை வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்படுகின்றதென இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரைக்கும் சபையின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்து மூலமாகச் செய்யப்படுவதுடன் ஆட்சேபனைக்கான காரணங்களை கூறும் கூற்றொன்றையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.*

*வி. பி. பி. கே. வீரசிங்க,*
*தலைவர்,*
*இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான*
*சம்பளச் சபை.*

*தொழில் திணைக்களம்,*
*கொழும்பு 5,*
*2012, செத்தெம்பர் 9.*

**அட்டவணை**

*இறப்பர் ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டனவும், 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிய 9436 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளனவும் காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும் 2010- ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டு கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள், அட்டவணையின் II ஆம் பகுதிக்கு பதிலாக பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-*

*"பகுதி II*

**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்**

**தொழிலாளர் வகுப்பு :**

***தரம் II :***

*வெட்டுதலும், பூசனம் பிடித்த இறப்பரைக் கழுவுதலும் அதற்குப் புகையிடுதலும் அமர்த்து பொறிகளுக்கும் நிறுக்கும் எந்திரங்களுக்கும் களஞ்சியத்தின் ஏனைய பகுதிகளுக்கும் தள்ளுதல் உட்பட பொது வேலை, சிப்பமாக்குவதற்கு இறப்பரை ஒன்று சேர்த்தலும் சுற்றுதலும், அமர்த்துதலும், வளையமிடுதலும், கம்பிகட்டுதலும், கடைச்சணற் சாக்கு உறைகள் வெட்டுதல், வர்ணப்பசை பூசுதலும் காயவைத்தலும், ஒன்று சேர்த்தலும் அடையாளமிடுதலும், விசேடமாகப் பொறியிடுவதற்கு கடைச்சணற் சாக்கைப் பரவிவிடுதல் சிப்பங்களை கடைச்சணற் சாக்கினால் மூடுதலும் வைத்தலும், சிப்பங்களை, ஆயத்தஞ் செய்தலும் களஞ்சியங்களையும் வடிகால்களையும் சுத்திகரித்தலும் கூட்டுதலும்.*

**இடைநிலைத் தரம் :**

*நிறுத்தல், தரம் பிரித்தல், வகைப்படுத்தல் தொழிலிலீடுபடுத்தப்பட்டுள்ள அமர்த்து பொறி இயக்குநரின் வேலை.*

***தரம் I :***

*சிப்பங்களை ஏற்றுதல், தரையிறக்குதல் அத்துடன் கொண்டு செல்லல், அடுக்குதல்,*

**காவலாளர்கள் :**

| ஊழியர் ஆண்டு | தரம் II<br>ரூ. ச. | இடைநிலைத் தரம்<br>ரூ. ச. | தரம் I<br>ரூ. ச. | காவலாளர்கள்<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 8,970.00 | 9,360.00 | 9,750.00 | 8,970.00 |
| 2 ஆம் ஆண்டு | 9,070.00 | 9,485.00 | 9,900.00 | 9,070.00 |
| 3 ஆம் ஆண்டு | 9,170.00 | 9,610.00 | 10,050.00 | 9,170.00 |
| 4 ஆம் ஆண்டு | 9,270.00 | 9,735.00 | 10,200.00 | 9,270.00 |
| 5 ஆம் ஆண்டு | 9,370.00 | 9,860.00 | 10,350.00 | 9,370.00 |
| 6 ஆம் ஆண்டு | 9,470.00 | 9,985.00 | 10,500.00 | 9,470.00 |
| 7 ஆம் ஆண்டு | 9,570.00 | 10,110.00 | 10,650.00 | 9,570.00 |
| 8 ஆம் ஆண்டு | 9,670.00 | 10,235.00 | 10,800.00 | 9,670.00 |
| 9 ஆம் ஆண்டு | 9,770.00 | 10,360.00 | 10,950.00 | 9,770.00 |
| 10 ஆம் ஆண்டு | 9,870.00 | 10,485.00 | 11,100.00 | 9,870.00 |
| 11 ஆம் ஆண்டு | 9,970.00 | 10,610.00 | 11,250.00 | 9,970.00 |
| 12 ஆம் ஆண்டு | 10,070.00 | 10,735.00 | 11,400.00 | 10,070.00 |
| 13 ஆம் ஆண்டு | 10,170.00 | 10,860.00 | 11,550.00 | 10,170.00 |
| 14 ஆம் ஆண்டு | 10,270.00 | 10,985.00 | 11,700.00 | 10,270.00 |
| 15 ஆம் ஆண்டு | 10,370.00 | 11,110.00 | 11,850.00 | 10,370.00" |

10- 321/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.